**செ. கு. எண்:106** **நாள்: 28.07.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 28.7.2017

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் உள் வட்டம், பிரப்பன்வலசை குரூப், சாலைவலசை கிராமத்தில் **27.7.2017** அன்று மாலை டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் **2**–ம் ஆண்டு நினைவு நாள் விழாவில் கலந்து கொண்டு, ராமேஸ்வரத்திலிருந்து ராமநாதபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் வேன், நிலை தடுமாறி சாலைவலசை கிராமம், பேருந்து நிலையம் அருகில் விபத்துக்குள்ளானதில், வேனில் பயணம் செய்த கடலாடி வட்டம், நரிப்பையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு செய்யது காதர் என்பவரின் மனைவி திருமதி அனீஸ் பாத்திமா என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி அனீஸ் பாத்திமா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் **14** நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பெற்று வருபவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த திருமதி அனீஸ் பாத்திமா அவர்களின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா **50,000/–** ரூபாயும்; லேசான காயமடைந்தவர்களுக்கு தலா **25,000/–**ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**